***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.189/2015 – P.W. 1 (LW2)***

| | |
|---|---|
| *Name* | ஆறுமுகம் - சிறப்பு உதவி ஆய்வாளர், தலையாமங்கலம் காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | வைத்தியநாதன் |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 54 |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.05.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

நான் தற்சமயம் தலையாமங்கலம காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.

கடந்த 2015ம் வருடம் மன்னார்குடி நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 11.07.2015ம் தேதி இரவு 10.30 மணியளவில் நான் மன்னார்குடி பைபாஸ் ரோட்டில் உள்ள பாரதிதாசன் மேல்நிலை பள்ளி அருகே சிறப்பு உதவி ஆய்வாளர் புலித்தேவன் மற்றும் இளைஞர் காவல் படையை சேர்ந்த சாமிநாதன் ஆகியோருடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த TVS XL என்ற இருச்சக்கர வாகனம் முன்பக்கம் நம்பர் பிளேட் இல்லாமலும் பின் பக்கம் TN 55 AZ 5774 என்ற பதிவெண்ணுடனும் வந்தது. அந்த இருச்சக்கர வாகனத்தில் வந்தவரை நாங்கள் சோதனை செய்தபோது என் பெயர் இம்பரான்கான் த/பெ. முகமது அலி ஜின்னா வடச்சேரியை சேர்ந்தவர் என்றும் கூறினார். அவர் வைத்திருந்த மஞ்சள் பையை சோதனையிட்டபோது வரிசை எண்.221 மற்றும் சேர்க்கை எண்.3603 என்ற எண் கொண்ட மாற்று சான்றிதழ் வைத்திருந்தார். அதில் முகமது மஜித் ரகுமான் என பெயிரிடப்பட்ட மாற்று சான்றிதழில் தலைமை ஆசிரியரின் கையொப்பம் இல்லை பெற்றோர்களின் கையொப்பம் இல்லை. மேலும் அந்த மஞ்சள் பையில் திருவள்ளுவர் மேல் நிலை பள்ளி, ஆலங்கோட்டை என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் என இரண்டு ரப்பர்

ஸ்டாம்ப் சீல்கள் இருந்தது. மேலும் அவரை விசாரித்தபோது மன்னார்குடி சாமி தியேட்டர் அருகில் உள்ள DDP work கடையில் உள்ள முருகன் என்பவர் தயார் செய்து கொடுத்ததாக கூறினார். 1வது எதிரியை நாங்கள் அழைத்துக்கொண்டு 2 வது எதிரியின் கடைக்கு சென்று அவரை விசாரித்தோம். 2 வது எதிரியை விசாரித்ததில் மன்னார்குடி திருமஞ்சன வீதியில் உள்ள மனோகரன் வாத்தியார் என்பவர் தயார் செய்ய சொன்னதாக கூறினார். மேலும், விசாரித்ததில் முகமதுஅலி ஜின்னாவின் மகனான முஜீபு ரகுமான் என்பவர் வெளிநாடு செல்வதற்கு பாஸ்போர்ட் பெறுவதற்காக மாற்று சான்றிதழ் தயார் செய்ய சொன்னதாக 2 வது எதிரி கூறினார். பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இதுசம்பந்தமாக ஆய்வாளரிடம் புகார் அளித்தார். இதுசம்பந்தமாக 12.07.2015 ம் தேதி ஆய்வாளர் என்னை விசாரித்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் மாற்று சான்றிதழ் தான் ஆஜர் 1 வது எதிரியிடம் இருந்து நாஙகள் கைப்பற்றியது ஆகும். **மேற்படி மாற்றுசான்றிதழ் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசா.ஆ.1 சிறப்பு உதவி ஆய்வாளர் புலிதேவன் என்பவர் கைப்பற்றியதாக உள்ளதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** சிறப்பு உதவி ஆய்வாளர் புலிதேவன் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுக்கையில் உள்ளார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் 2 ரப்பர் ஸ்டாம்களும் 1 வது எதிரியிடமிருந்து நாங்கள் கைப்பற்றியது தான். **மேற்படி ரப்பர் ஸ்டாம்புகள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சிறப்பு உதவி ஆய்வாளர் புலிதேவன் என்பவர் கைப்பற்றியதாக உள்ளதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.**

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் தொடர்பான காலகட்டங்களில் நான் என்ன கிரேடில் இருந்தேன் என்றால் தலைமை காவலராக திருமக்கோட்டை காவல் நிலைய பணியில் இருந்தேன். அயல்பணியாக நெடுஞ்சாலை ரோந்து பணியில் இருந்தேன். கடந்த 10 ஆண்டுகளாக திருவாரூர் மாவட்ட எல்லைக்குள் பல்வேறு காவல் நிலையங்களில் பணியாற்றி தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக தலையாமங்கலம் காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். நான் பணியாற்றும் காவல் நிலையம் மன்னார்குடி சரக எல்லைக்குட்பட்டது. நெடுஞ்சாலை ரோந்து பணி என்பது மன்னார்குடி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் பணி செய்வது. நெடுஞ்சாலை ரோந்து பணி என்பது மன்னார்குடி நகர எல்லைக்குள் ஏதேனும் ஆபத்துக்கள் இடர்பாடுகள், முரண்பாடுகள், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டியிருந்தால மன்னார்குடி நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து பணியில் உ்ளள காவலர்கள் சம்பவ இடம் வந்தவுடன் அவர்களுக்கு துணைபுரிவது ஆகும். நெடுஞ்சாலை ரோந்து பணி

என்பது வாகன தணிக்கை செய்யும் பணி கிடையாது என்றால் சரிதான். மேலதிகாரிகள் உத்தரவிட்டால் பணி செய்வோம். அன்றையதினம் வாகன தணிக்கை செய்ய ஏதேனும் உத்தரவு விடப்பட்டியிருந்ததா என்றால் வாய்மொழி உத்தரவு தான். அவ்வாறு வாய்மொழி உத்தரவு அன்றையதினம் இருந்ததாக என்னை விசாரித்த ஆய்வாளரிடம் தெரிவித்து இரந்தேனா எனறால் இல்லை. அதுபோன்ற வாய்மொழி உத்தரவுகள் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், வழக்கிற்கு ஏற்றாற்போல் இன்று மாற்றி வாய்மொழி உத்தரவு விடப்பட்டியிருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சோதனை செய்யததாக சொல்லப்படும் விவரத்தை மன்னார்குடி நகர காவல் நிலையத்திற்கு நான் தகவல் தெரிவித்திர்களா என்றால் தெரிவித்தோம். அவ்வாறு உடனடியாக காவல் நிலைத்திற்கு தகவல் தெரிவித்ததாக என்னை ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை சோதனை இடவில்லை என்றும், அதனால் தான் மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளை சோதனை செய்யப்படவில்லை என்றும், எந்தவித தடயப்பொருட்கள் கைப்பற்றபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், எதிரிகள் மீது போடப்பட்ட பொய்வழக்கில் எங்களை கருவியாக பயன்படுத்தப்பட்டேன் என்பதால் தற்போது நான் பணியில் இருப்பதால் வழக்கிற்கு ஏற்றாற்போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்தவித தனிப்பட்ட சாடசிகளும் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எனது ரோந்து அலுவல் பணி என்பது திருவாரூர் விளமல் பாலத்தில் இருந்து தொடங்கி திருவாரூர் மாவட்ட எல்லையான வடுவூர் ஏரிக்கரை பாலம் செக்போஸ்ட் வரை ரோந்து செல்லவேண்டும் என்றால் சரிதான். நெடுஞ்சாலை மட்டுமே நாங்கள் பயணிக்கவேண்டியது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து செல்லவேண்டிய சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நெடுஞ்சாலை ரோந்தின் போது ஏதாவது பிரச்சனயோ ஏற்பட்டால் அதனடிப்படையில் எங்களுக்கு ஏதேனும் உத்தரவு வந்தால் நாங்கள் மேலதிகாரிகள் குறிப்பிடும் இடத்திற்கு செல்வோம் என்றால் சரிதான். மேலதிகாரிகள் உத்தரவிடும் பணியையும் செய்வோம். பணி செய்வதற்கான Note Book வைத்திருப்பது வழக்கம் என்றால் சரிதான். அதனை பாக்கெட் நோட் என்று அழைப்பார்கள். அந்த பாக்கெட் நோட் என்பது எங்களது பணி தொடர்பான விவரங்களை நடைபெறும் நிகழ்வுகளையும் அதில் குறித்து கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கையில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் தொடர்பாக அந்த பாக்கெட் நோட்டில் பதிவு செய்யப்பட்டியிருப்பின் ஆய்வாளர்

விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. எங்களிடம் தான் உள்ளது. அதேபோல் நான் வைத்திருந்த பாக்கெட் நோட்டை ஆண்டு ஆய்வுக்கு அதனை சமர்ப்பிக்க வேண்டுமா என்றால் எங்களை சோதனை செய்ய வரும் போது மட்டுமே காண்பிக்க வேண்டும். அதனை அவர்கள் தணிக்கை செய்வார்கள். அதனை உயர்அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு இருக்கையில் எங்களது அதிகாரிகளையும் பாக்கெட் நோட்டையும் சமர்பிக்க வேண்டும் என்றால் நாங்கள் சமர்ப்பிபது கிடையாது. முதல் விசாரணையில் சொன்ன முகமது மஜித் ரகுமான் என்ற பெயர் கொண்ட நபர் தொடர்பான ஆவணம் இருந்ததாக சொல்லப்படும் நிலையில் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மன்னார்குடியில் சாமி தியேட்டர் இருக்கும் இடம் ருக்மணிபாளையம் ரோடு என்பது சுமார் 1 கி.மீ தூரம் உள்ள இடம் என்றால் சரிதான். குறிப்பாக சாமி தியேட்டர் அருகில் எந்த இடம் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் கடைபெயர் சொல்லியுள்ளேன். சாமி தியேட்டருக்கு மேற்கு பகுதியில் உள்ள N Star கடை தான். நான் நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்தில் 10 நிமிடத்தில் எங்கள் வாகனத்தில் வந்தால் காவல் நிலையத்திற்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். 2 வது எதிரியை சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரணை செய்ததாக சொல்லும் வகையில் வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தாரா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் இல்லை என்றால் சரியல்ல. அசா.ஆ.1, சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவைகள் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்தவிதமான எழுத்துபூர் உத்தரவு பாரதிதாசன் பள்ளி அருகே ரோந்து பணி செய்யசொல்லி இல்லை என்றால் சரிதான். நெடுஞ்சாலை ரோந்துபணியில் ஓட்டுநர், சிறப்பு உதவி ஆய்வாளர், ஒரு தலைமை காவலர் ஆகியோர்களை கொண்டது. சாதாரணமாக அசாம்பாவிதம் அல்லது குற்ற செயல் நடந்தால் அது தொடர்பாக முதலில் புகார் கொடுக்கப்படவேண்டும் என்றும், அதனடிப்படையில் விசாரணை அதிகாரி புலன் விசாரணை செய்வது நடைமுறை. அதுவே நாங்கள் காவல் நிலையத்தில் பணி இருக்கும் பட்சத்தில் அந்த சரகத்தில் உட்பட்ட எல்லையில் அசாம்பாவிதமோ அல்லது குற்றசெயல் இருந்தால் Suo motu நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரிதான். நெடுஞ்சாலை பணியில் இருப்பதால் மேற்படி எங்களால் வழக்கு பதிவு செய்ய முடியாது. அதனால் எங்களால் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ள முடியாது. முதல் விசாரணையில் எதிரியை விசாரித்ததாக சொன்ன சங்கதிகள் குறித்து வழக்கிற்காக தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களை பொறுத்த வகையில் ஒரு எதிரியை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்றோம் என்றால் 2 எதிரிகளையும் அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றோம். அவ்வாறு இருக்கையில் எனக்கு ரோந்து பணி இருக்கும் போது மேற்சொன்ன 2 வது எதிரியை

அழைத்து செல்வதாக சொல்லும் வகையில் எங்களுக்கு அதிகாரம் இல்லை. என்னை ஆய்வாளர் மட்டும் தான் விசாரித்தார். அதுவும் ஒரு முறை மட்டும் தான் விசாரித்தார். காவல் ஆய்வாளிரிடம் சிறப்பு உதவி ஆய்வாளர் புலிதேவனுடன் எத்தனை மணிக்கு புகாருடன் சென்றோம் என்றால் இரவு 11.30 மணிக்கு சென்றோம். அப்போதே என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் மறுநாள் என்னை விசாரித்தார். முதல் விசாரணையில் எதிரிகளை தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு இருக்கையில் 2 வது எதிரி கடையில் இருந்த கம்பியூட்டர் உள்ளிட்ட பொருட்களை எடுத்து வந்து ஒப்படைத்தோமா என்றால் இல்லை. நாஙகள் இருச்சக்கர வாகனம், TC. ரப்பர் ஸ்டாம் ஆகியவைகளை எடுத்து வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். அவ்வாறு ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. N Star என்ற கடையே இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/----ஜெ. தமிழ்முருகன்,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.